ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

**हितपरिमितभोजी नित्यमेकान्तसेवी सकृदुचितहितोक्तिः स्वल्पनिद्राविहारः । अनुनियमनशीलो यो भजत्युक्तकाले स लभत इह शीघ्रं साधुचित्तप्रसादम् ॥**

सर्ववेदान्तसिद्धान्ते ॥

தன் சரீரத்திற்கு ஹிதமாயும், கணக்காகவும் புசிப்பவனும், எப்பொழுதும் ஜனக்கூட்டங்களில் செல்லாமல் தனியாய் ஒதுங்கியிருப்பவனும், அதிக வார்த்தை பேசாமல் அவசியமாயிருந்தால் ஒருதடவை உசிதமாயும் ஹிதமாயுமிருக்கும் வசனத்தை மொழிகின்றவனும், அற்ப நித்திரையுடையவனும், விளையாட்டில் அதிகப் பற்றுதலில்லாதவனும், இயற்கையில் அடங்கியிருக்கும் இந்திரியங்களையுடையவனுமாக இருந்துகொண்டு எவன் சாஸ்திரங்களில் குறிப்பிட்ட காலங்களில் பகவானை ஆராதிக்கிறானோ அவன் சீக்கிரமாக நன்றாய் தெளிவடைந்த சித்தத்தையுடையவனாக ஆகிறான்.

மனிதர்களுக்கு **मन एव मनुष्याणां कारणं बन्धमोक्षयोः** என்று சான்றோர் சாற்றியுள்ளபடி எவ்விதகஷ்டங்களை அனுபவிப்பதற்கும் தோஷத்துடன்கூடிய மனமே காரணமாகின்றது. தம்மனத்திலிருக்கும் தோஷங்களை அறவே விலக்கிவிட்டால் அந்த மனமே விசேஷமான சுகத்திற்கும் காரணமாகின்றது. ஆகையால் அந்த தோஷங்களைப் போக்குவதற்கு ஆகாரநியமம், ஏகாந்தவாசம் அற்பமான வியவஹாரம் அவசியம் வேண்டிய நித்திரைஆகாரம் இவைகளை மாத்திரம் கிரகித்துக்கொள்ளுதல், இந்திரியங்களை படக்குதல் முதலிய ஸாதனங்களைப்பெற்று பகவதாராதனத்தைச் செய்தால் மனத்திலுள்ள ஸகலதோஷங்களும் விலகி சித்தத்திற்குத் தெளிவு ஏற்படும். ஏற்பட்டால் சீக்கிரமாக ஈசுவரப் பிரஸாதத்தைப் பெற்று உத்தம சுகத்தையடையலாம்.

உபபத்திராதிபர்.

ஆர்யதர்மம்.
குரோதன-ஸு தை-மீ ௨௨வ

# காலத்தின் கொடுமை.

(௫௫-வது பக்கத்தொடர்ச்சி.)

இதற்குமேல் நம் தர்மங்களுக்கு வேறு என்ன பாக்கியம் வேண்டும் ? அந்தோ! இவ்வித பாக்கியம் ஸநாதனதர்மங்களுக்கில்லாவிடில் இந்த மாதிரி மஸோதா ஒன்றைக்கொண்டுவர வேண்டுமென்று ஒரு புண்ணியவானுக்கு எப்படித்தோன்றும் ? அவ்விதமே தோன்றிக்கொண்டு வந்தாலும் 'மதஸம்பந்தமான கார்யங்களில் தாங்கள் தலையிடுவதில்லை' என்று முன்னமேயே வாக்களித்திருப்பதையும் அனுதாவுசெய்து காருண்யமுள்ள நம் கவர்ன்மெண்டாரவர்களும் இதை எப்படி அங்கீகரிப்பார்கள் ! மற்றும் சட்ட சபையில் விளங்கும் மெம்பர்கள் இந்த மஸோதாவை ஆக்ஷேபிக்காமலிருப்பார்களா? இதர ஜனங்கள் எவ்வளவு ஆக்ஷேபித்தாலும் அதைப் பொருட்டாகக் கருதாமல் பிடிவாதமாய் இதைச் சட்டமாக்க வேண்டுமென்று எல்லா அதிகாரிகளுக்கும் தோன்றுமானால் இதற்கும் நம் ஸநாதனதர்மத்தின் தௌர்பாக்கியத்தைத் தவிர வேறு யாது கூறவியலும்?

இரண்டாவது தீண்டாமை ஒழிப்பது. நம் தேசக்ஷேமத்திற்காகப் பாடுபடுகிறோமென்று முன்வந்திருக்கும் சிலருக்கு இது ஒரு முக்கியமான கார்யம்; இச்சிலருக்குத் திருப்தியையுண்டுபண்ணவேண்டி சில ஸாமான்ய ஜனங்களும் பத்திரிகைகளிலும், உபன்யாஸமேடைகளிலும் " தீண்டாமையை ஒழிக்க வேண்டும் " என்றும் நம் தேசத்திற்கு அது பெருங்கேட்டை விளைவிக்கின்றது என்றும் விஷயத்தின் உண்மையையறியாமல் வீண் கூச்சலிடுகிறார்கள். இதைக்கேட்டும் சிலருக்கு மதிமயக்க

முண்டாகிறது. இந்தக்காரியத்தைச்செய்ய முயற்சி எடுத்துக் கொண்டதுமுதல் நம் தேசத்தில் வேறு பயனில்லாவிட்டாலும் ஜாதிச்சண்டையும், பல கஷ்டங்களும் நன்கு விருத்தியடைகின்றன. இன்னும் இவை நன்கு விருத்தியானுல் தேசத்திற்குப் பூராவாக க்ஷேமம் ஏற்பட்டுவிடும். இவ்வித தேச க்ஷேமம் ஏற்படவேண்டியதே அவர்களின் சங்கற்பமெனத் தெரிகின்றது. இந்த விஷயத்தைப்பற்றி 'சண்டாளஜாதிதத்வ நிரூபணம்' என்ற எங்களாலியற்றப்பட்ட நூலில் விஸ்தாரமாய் ஆக்ஷேப ஸமாதானங்களுடன் எழுதப் பட்டிருப்பதால் இங்கு விரிக்கவில்லை. தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்று சிலர் செய்யும் பெரும் முயற்சியால் வர்ணாச்ரமதர்மத்திற்கு அழிவும் ஜாதிச்சண்டையும் உள்கலகமும்ஏற்படுமேயன்றி உலகத்திற்கு க்ஷேமத்தைப்பெரிய மூட்டையாக நாங்கள் கொண்டுவரப்போகிறோம் என்று கூறுவது முற்றிலும் தவறு என்பதும் அறிஞர்கள் அறிந்த விஷயமே. இதை இம்மட்டோடு நிறுத்திவிட்டு வேறு விஷயங்களையும் சற்றுக் கவனிப்போம்.

இவ்வளவு உபகாரம் நம் தேசத்திற்குச் செய்தும் போதாதெனக்கருதி ஸ்திரீகளுக்கு மாத்திரம் பிரத்தியேகமாய் பேருபகாரம் புரியவேண்டுமெனக் கங்கணம் பூண்டவோர் தர்மாத்மா "கல்யாணமான ஸ்த்ரீகளுக்கு 13 வயதாகவும் கல்யாணமாகாதவர்களுக்கு 14 வயதாகவும் ஸம்மதவயதை ஏற்படுத்தி ஒரு சட்டம் இந்தியா சட்டசபையில் நிறைவேற்றியிருப்பதாகக்கேள்வி. இவ்விதம் கொண்டுவந்திருப்பது உண்மையாயிருந்து இதை நம் அரசாங்கத்தார்களும் அங்கீகரித்து விட்டார்களாகில் இந்துப் பிராமணர்களுக்கு வேறு அநர்த்தம் வேண்டியதில்லை. இந்து சாஸ்திரங்களில் ஸ்திரீகளைப் பரிபாலிப்பதிலும் அவர்களுக்கு விவாகம் முதலிய வைதிககர்மங்களை அனுஷ்டிக்கவேண்டிய விஷயத்திலும் மனு, யாக்ஞவல்கியர், பாராசர், முதலானமஹரிஷிகள் அதிகமான நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

स्वां प्रसूतिं चरित्रं च कुलमात्मानमेवच ।

स्वं च धर्मं प्रयत्नेन स्त्रियं रक्षन् हि रक्षति ॥ मनुः ॥

"ஸ்திரீகளுக்கு அவ்வக்காலங்களில் விதிப்படி செய்யவேண்டிய காரியங்களை நன்கு அனுஷ்டித்துப் பரிபாலிப்பவர்கள்தான் தம் குலம், மக்கள் நடத்தை, தர்மம் முதலியவைகளையும் தங்களையும் ரக்ஷிப்பவர்களாவார்கள்" என்று மனு மொழிந்திருக்கிறார். இவ்விதம் ஸ்திரீகளைச் சரியாய் ரக்ஷிக்கவேண்டிய கடமைஒவ்வொரு காலத்தில் ஒவ்வொருவருக்கு உண்டு.

(தொடரும்)

உபபத்திராதிபர்.

---

# மஹா சிவராத்திரி நிர்ணயம்.

இவ்வருஷத்தில் நிகழும் மஹாசிவராத்திரி விரதம் நாளது தை-மீ 29உ செய்யவேண்டுமா? மாசிமாதத்தில் செய்யவேண்டுமா? என்று சிலருக்கு ஸந்தேஹம் நேர்ந்திருக்கின்றது. அதற்குக்காரணம் சிவராத்திரி விரதம் ஸௌரமானத்தாலேற்படுத்த வேண்டியதாகச் சிலருக்கும், சாந்திரமானத்தால் கற்பிக்கவேண்டியதாகச் சிலருக்கும் உண்டாகிய தோற்றந்தான். அதில் வைத்தியநாததீக்ஷிதீயாதி நிபந்தநங்களைப் பார்க்கும்பொழுது சுருதி ஸ்மிருதிப் பிரமாணங்களையவலம்பித்த வைதிகர்களுக்குப் பெரும்பாலும் அனேகவிரதங்கள் சாந்திரமானத்தையனுஸரித்தே பஞ்சாங்கங்களில் போடப்படுகின்றன. சிஷ்டாசாரமும் அப்படித்தானிருக்கின்றது. ஆகமாதிகளை முக்கியப்பிரமாணமாகக்கொண்ட தாந்திரிகர்களுக்குப் பெரும்பாலும் ஸௌரமாநானுஸாரமாகவே விரதாதிகள் கூறப்படுகின்றன. அவர்களது ஆசாரமும் அப்படித்தானிருக்கின்றது. ஆகவே பிரகிருதமான மஹாசிவராத்திரி விரதத்தை நிரூபிக்கும் வைத்தியநாததீக்ஷிதீயதிதிநிர்ணயகாண்டத்தில் சிவராத்திரிவிரதநிர்ணயப் பிரகாணத்தில் மாகமாஸத்திய கிருஷ்ணசதுர்த்தசியென்று சாந்திரமானத்தாலேயே வியவகரிக்கப்பட்டிருக்கின்றது. மாகமாஸமென்பது சாந்திரமாஸந்தான் என்பது எல்லோருக்கும் வெளிப்படை.

**मेषादिस्थे सवितरि यो यो दर्शः प्रवर्तते ।**
**चान्द्रमासास्तत्तदन्ताश्चैत्राद्या द्वादश स्मृताः ॥**

மேஷம் முதலிய ராசிகளில் ஸூரியனிருக்கும்பொழுது எந்தெந்த அமாவாஸைவருகின்றதோ, அதை முடிவாகவுடைய சைத்திரம் முதலிய 12-மாதங்கள் சாந்திரமாதங்களாம்.

என்பதாதி வசனங்கள் இங்கு பிரமாணமாகும். இதன் விரிவு "மானபேதம்" என்ற வியாஸத்தில் நிரூபிக்கப்படும்.

**माघस्य कृष्णपक्षे या तिथिश्चैव चतुर्दशी ।** என்றும்,
**माघमास्यसिते पक्षे विद्यते या चतुर्दशी ।** என்றும்,
**"माघकृष्णचतुर्दश्यां" "माघकृष्णचतुर्दशी".**

என்றும் சிவராத்திரி விஷயத்தை நிரூபிக்கும் வசனங்களெல்லாவற்றிலும் மாகமாஸமென்றே எடுக்கப்பட்டிருப்பதால் வைதிகர்களனைவரும் நாளது குரோதனவருஷத்திய மஹாசிவராத்திரி விரதத்தை நாளது தை-ஸ்ரீ 29உயன்றே அநுஷ்டிக்கவேண்டும். தாந்திரிகர்கள் ஸௌரமாஸமாகிய மாசிமாஸத்திய கிருஷ்ணசதுர்த்தசியன்று சிவராத்திரி விரதத்தை அநுஷ்டிக்கவேண்டியது. ஸௌரமாஸத்தில் இவ்விரதத்தை அநுஷ்டிக்கவேண்டியதாகச் சிலவசனங்களில் கூறப்படுகின்றதேயென்று ஸந்தேகிப்பவர்கள் அதைத் தாந்திரிகவிஷயமாகப் பொருட்படுத்திக்கொள்ளவேண்டியது. இவ்வருஷம் அநுஷ்டிக்கவேண்டிய சிவரா்த்திரி காலநிர்ணயத்தைச் சுருக்கி இங்கெழுதினேம். இதில் சர்ச்சைநிகழ்ந்தால் அடுத்த ஸஞ்சிகைகளில் பிரசுரிப்பாம்.

V. S. வேங்கடராமசாஸ்திரி.
ஆர்யதர்மம் பத்திராதிபர்.

---

## லிங்கஸ்வரூபவிசாரணை.

ஆர்யர்களே! நம் ஆர்யதேசத்தில் நம்மை இம்மையிலும், மறுமையிலும் துன்பமறச்செய்து காப்பாற்ற மூலமாய்நிற்பது

தேவபாஷை. இப்பாஷையைக்கற்றுக்கொள்வதும் அதில் அபிமானத்தையும் பக்தியையும் செலுத்துவதுமே பரமஸாம்பிராஜ்யத்திற்குக் காரணமென்றான்றோர்களின் துணிபு. அதனைக்கற்றுக் கொள்வதிலும் கற்பிப்பதிலும் பக்தியும் அதிகம். ஏனெனில் இப்பாஷை ஒன்றுதான் அனாதியென்பதோர்புறமிருக்கட்டும். இது தேவபாஷையா மென்பதிரண்டாவது. மற்றும் இப்பாஷையின் அக்ஷர வரிசையின் அமைப்பே மாத்ருகா என்று கூறப்பெறும் தேவதாசக்தியின் கிரமவரிசை உள்ளது. ஆதல்பற்றியே நம் முன்னோர் இதனைக் கற்பதற்காக இக்காலம்போல் நினைத்தபடி புத்தகத்தைக்கையில் கொடுத்துவிடுவதல்ல. இதற்கு நாள் நக்ஷத்திரங்களை நன்குகவனிப்பார்கள். ஆதல்பற்றியே நிர்ணயஸிந்துக்காரர் தமது நிபந்தனக்கிரந்தத்தில்.

अक्षरस्वीकृतिं कुर्यात्प्राप्ते पञ्चमहायने ।
उत्तरायणगे सूर्ये कुंभमासं विवर्जयेत् ॥

“பையனுக்கு ஐந்தாவதுவயது வந்தபிறகு சூர்யன் உத்தராயணத்திலிருக்கும்போது மாசிமாதத்தை மட்டிலும்நீக்கி அக்ஷராப்பியாஸத்தைச் சொல்லிவைக்க வேண்டுமென்றார். இம்மட்டா?

प्राप्तेतु पञ्चमे वर्षे ह्यप्रसुप्ते जनार्दने ।
षष्ठीं प्रतिपदं चैव वर्जयित्वा तथाष्टमीम् ॥
रिक्तां पञ्चदशीं चैव सौरिभौमदिने तथा ।
एवं सुनिश्चिते काले विद्यारंभन्तु कारयेत् ॥
पूजयित्वा हरिं लक्ष्मीं देवीं चैव सरस्वतीम् ।
स्वविद्यासूक्तकर्त्तारं स्वां विद्यां च विशेषतः ॥
एतेषांचैव देवानां नाम्नातु जुहुयाद्घृतम् ॥

ஐந்தாவதுவயது வந்தபிறகு ஜனார்தனர் தூக்கமில்லாக்காலத்தில் ஷஷ்டி, பிரதமை, அஷ்டமீ, சூன்யதிதி, பூர்ணிமை, அமாவாஸ்யை இந்தத்திதிகளையும் சனி, செவ்வாய் இந்தக்கிழமைகளையும் விலக்கி பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட நல்லகாலத்தில் விஷ்ணுவையும் லக்ஷ்மியையும் ஸாஸ்வதீதேவியையும் தனது வித்தையின்

ஸூக்தத்தை வெளியிட்ட ரிஷியையும் தனது வித்தையையும் பூஜித்து இந்த தேவதைகளின் பெயரால் ஹோமத்தையும்செய்து வித்யாரம்பம் செய்யவேண்டும்" என்று தர்மசாஸ்திரங்கள் கதறுகின்றன. இவ்விதமெல்லாமிருக்க விஜயதசமியன்று என்ன கிழமையானாலும் வித்யாப்பியாஸம்செய்து வைக்கலாமென்பதற்குப் பிரபலப் பிரமாணம் எங்கிருக்கிறதோ தெரியவில்லை. அக்காலத்தில்தான்செய்கிறதென்ற நியமமேற்பட்டிருக்கிறதொருபுறமிருக்கட்டும். இவ்விதம் நல்ல தினத்திலும் அனுக்கிரகம் செய்யச்சக்திபெற்ற வயதுமுதிர்ந்த உபாத்தியாயரிடத்தில் ஒப்புவிப்பார்கள். அவ்விதம் அங்குச் சிக்ஷைபெறும்போதே குழந்தைக்கு அகந்தையடங்கிக் குரு சொல்வதுதான் வேதமென்று பிடிவாதமேற்படும். இதுதான் நமக்கு முதலிலேற்படவேண்டும். ஆதல்பற்றியேதான் ஸத்குருவையேதேடி நம் பெற்றோர்கள் ஒப்புவிப்பார்கள். இனி இதன் வன்மையைப்பற்றி விரிக்கின் பெயர்கொடுத்த விஷயத்திற்கிடமில்லாமற் போய்விடுமாதல்பற்றி அங்கிரங்க இனி வழிபார்ப்போம். இவ்விதம் மாத்ருகோபதேசத்தை முறையேபெற்று ஆசார்யாதீனனாய் இருந்துவருபவனே ஆஸ்திகோத்தமனாவான். இவனது புத்தி எப்போதும் ஒரு விஷயத்தைத் தனது மனம்போனபடி அர்த்தம் செய்யத் துணியமாட்டாது. ஒருவாக்கியத்திற்கு அர்த்தம்செய்யப் புகுமுன் இதனபிப்பிராயம் பெரியோர்களுக்கெவ்விதமிருக்கிறது. இவ்விஷயமான அனுஷ்டானம் இதுகாறும் எவ்விதமிருந்துவருகிறதென்பதை எல்லாம் ஆராய்ந்த பிறகே தானும் துணிவுகொள்வான். ஆதல்பற்றியே.

**शब्दात्प्रकरणाल्लिङ्गा दौचित्याद्देशकालयोः ।**
**शब्दादर्थं विजानीयान्न शब्दादेव केवलात् ॥**

'சப்தத்தினாலும் பிரகரணத்தினாலும் லிங்கத்தினாலும் தேசகாலங்களின் உசிதத்தினாலும் சப்தத்தின் அர்த்தத்தைக்கவனிக்கவேண்டுமேயல்லாது கேவலசப்தத்தைக் கேட்டமாத்திரத்தில் அர்த்தம் செய்ய ஆரம்பித்துவிடக்கூடாதென்றனர். இதனால் நமக்குக்கிடைத்தது" இது எப்பதமாயினும் எப்பாஷையிலுமாயினும் காலதேசமறிந்து அர்த்தம் கொள்வதுதான் சாஸ்திரத்திற்கும் சுகத்

திற்கும் இன்றியமையாச் சாதனமாகுமென்றேற்பட்டது. இவ்விதமெல்லாம் ஆஸ்திக்கியத்தையும் பெரியோர்களையும் தைவத்தையும் மற்றெல்லாவழிகளையும் முதல் முதல் விளக்கிக்காட்டவந்ததுதேவபாஷைதான். இது தேவபாஷையாதல்பற்றியே இதனிடத்தில் பயபக்தியுடன் பெரியோர்களை முன்னிட்டுக்கொண்டே போனால்தான் அப்பாஷையின் ஸொந்தக்காரரின் வீடேகலாம். அவ்விதம் அத்தகையோரைப் பின்தொடர்ந்தால் அவர்கள் சொல்வதையேகேட்டுக் கடைத்தேறலாமென்பது கொண்டே இங்கு லிங்கம் என்றால் என்ன? அதனது ஸ்வரூபமென்ன? அதனை நாம் எவ்விதமுணர்வது? அதனை அறிந்ததாலாயபயன்யாது? என்பனவற்றைச் சற்று விசாரிப்பாம்.

லிங்கம் என்பது தேவபாஷைப்பதம்தான். பொதுவாய் இப்பதத்திற்கு அடையாளம் என்று பெயர்கூறலாம். இதற்கு ஸம்ஸ்கிருதத்தில் **गमकम्** என்றும் சொல்வார்கள். அஃதாவது அறிவிப்பது என்றுதான் பொருள். ஆகவே, லிங்கம், கமகம் என்பதுபோல் தமிழிலும் அடையாளம் அறிவிப்பது என்று சொல்லலாம். இனி எதற்கு அடையாளம் எதை அறிவிப்பது என்று சங்கைநிகழும். ஆகவே இதுபிதா, புத்திரன் முதலிய சப்தங்கள்போல் ஸாபேக்ஷபதமென்பார்கள். ஆனதால்இதற்குத்தனியான அர்த்தம் பிரயோஜனப்படாமைபற்றி இங்குஸர்வப்பிரஸித்தமாய் பாமரரும் தெரிந்துகொண்டுவியவகரிக்கிற சப்தத்தோடுகூட்டியே பார்ப்போம். அப்படியாயின் சிவலிங்கம் என்றேற்பட்டது. இப்போது சிவலிங்கமென்ற பதத்தின் கருத்தையாவருமறியாமலே அறிந்திருப்பார். அதாவது மேலாழ்ந்தவாறு சிவலிங்கமென்றால் இதனைக் குறிப்பிடுகிறதென்று அன்யமதஸ்தனும் சொல்லிவிடுவான். ஆனால் சிவலிங்கம் என்றாலென்னஅதற்கு அப்பெயர் வரக்காரணமென்ன? சிவனுடையலிங்கமா சிவனுக்குலிங்கமா சிவனேலிங்கமா சிவனானலிங்கமா என்பதாதி விசாரிக்கப்புகின் ஆஸ்திகனுபினும் பதிற்கூறச் சற்று பின்வாங்குவான். ஆதல்பற்றித்தான் இதனை அறியாமலிருந்திருப்பாரென்று முன் கூறினேன். இனி இதனை விசாரிப்பாம்.

இவ்விஷயத்தில் பரம ஆஸ்திக வைதிகோத்தமசிகாமணிகள் இவ்விதமெல்லாம் அர்த்தம் கூறுகின்றனர். அதாவது.

शिवएव स्वयंलिङ्गं लिङ्गं गमकमेव हि ।
शिवेन गम्यते सर्वं शिवो नान्येन गम्यते ॥

சிவனால் அறியப்படுகிறது என்று சிவலிங்கம் என்ற பதத்தின் அர்த்தத்தை இதனால் விரித்தார்.

शिवेन लिंग्यते गम्यते इति शिवलिंगं ।

என்று வியாக்கியானமாயிற்று இங்கும் ஸாபேக்ஷமாய்நிற்கிறது. ஏனெனில் சிவனாலறியப்படுவது என்றால் எது என்பதே. இங்குச் சிவனாலறியப்படுகிறதென்றால் சிவனல்லாதது என்று ஸாமான்யமாய்ப் பொருள் ஏற்படும். ஆகவே சிவன் என்பவனால் சிவனல்லாதது அறியப்படும் என்றால் இங்குமிகக்குறைவு ஏற்பட்டுவிடும். ஏனெனில் சிவனென்றுநாம்எந்தப்பொருளைக்கூறுகிறோமோ அது பரம்பொருளென்றும் அது வேதப்பொருளென்றும் வேதாந்தங்களின் பரம சூக்ஷ்மமான ஸாரப்பொருளென்றும் அது எங்கும் நிறைந்தபொருளென்றும் அப்பொருளில்லாத விடமில்லையென்றும் அப்பொருளைத்தவிற வேறுஎன்று இரண்டாவதே கிடையாதென்றும் அப்படி இருக்கச் சிவனால் சிவனல்லாதது அறியப்படுகிறதென்றால் பரமவிரோதமாய் ஆகிறதென்றும் சிவனால் சிவனல்லாததை அறிந்தால்தான் மோக்ஷம் என்றல்லவா ஆகிறதென்றும் இவ்விதம் பரம அனர்த்தத்திற்கா சிவலிங்கம் என்று பலதுறைகளில் நமதுசங்கைஇறங்கி நடக்கவாரம்பிக்குமேயென்றால்; கூறுவோம் இவ்விதம் சங்கை நிகழுமென்றுகொண்டே शिवो नान्येन गम्यते சிவன் இன்னொன்றால் அறியத்தக்கவனல்லன் என்றார். இங்கு அறியப்படவேண்டியது இது. ஜகத்தில் உள்ள ஸமஸ்தங்களும் ஈசனால்மறைக்கத்தக்கது என்றுஈசாவாஸ்யோபனிடதத்தில்முதல் மந்திரம் கூறுகிறபடி சிவனாலறியப்படுகிறதென்று கொள்ளவேண்டும். இவ்வாக்கியமானது த்வைதபாவனையுள்ள அதிகாரியைப் பார்த்து உபதேசித்ததென்பதை அறியவும். நாம் பிரபஞ்சத்தை ஸத்யமாய் நம்பி அதில் உழல்கின்றோம். சிவனென்றும் ஸாமான்

யமாய் அறிகின்றோம். இவ்விதம் உள்ள நம்மை அத்வைதபாவனைக்குக் கொண்டுவருகிறதாகவே பரம கருணையோடு எதை அறிந்தால் எல்லாவற்றையுமறிந்ததாய் ஆமோ அதைஅறி என்று கூறிய உபனிடதத்தின் கருத்தை வெளியிடவேண்டியே சிவனால் அறியப்படுகிறது என்று சுருக்கமாய்க்கூறியது. இதனால் நமக்கேற்பட்டது யாதெனில் எல்லாவற்றையும் சிவமயமாய் அறியத்தக்கது என்றாயிற்று. (தொடரும்)

M. N. சுப்பிரமணிய சாஸ்திரி.

---

# வ ர ரு சி.

---

(சஉ-வது பக்கத்தொடர்ச்சி.)

பிறகு செய்வது யாதுஎன்று அறியாத அவர்கள் சிந்தையால் கலங்கினபோது அவர்களில் யோகஸித்திபெற்ற இந்திரதத்தன் சொன்னதாவது.—தோழர்களே! ஓர்உபாயம் எனக்குத்தோன்றுகிறது. உயிர்துறந்த நந்தனுடலில் யோகமஹிமையால் நான் நுழைகிறேன். வாருசி என்னிடம்வந்து பொன்னையாசிக்கட்டும். நான் திரும்பிவருகிறவரையில் எனது சரீரம், இந்தச்சூன்யமான தேவாலயத்தில் வியாடியால் பாதுகாக்கப்படட்டும் என்று கேட்டுச்சந்தோஷங்கொண்ட மற்ற இருவரும் 'நல்லது நல்லது' என்று அநுமோதித்தனர்.

பிறகு நந்தன் உயிர்துறந்தபோது, எங்கும் ஹா ஹா என்ற அழுகைக்குரல் ஏற்பட்டது. சகடாலன் முதலான மந்திரித் தலைவர்கள், அந்தப்புரத்தில் நுழைந்து, ஹா இறந்தோம், ஹா இது என்ன நேர்ந்தது நாதனற்றவரானோம். 'நந்தனே' இவ்வுலகின் கண்களுக்கும் ஆநந்தமாயிருந்தவனே, நீர் இல்லாமல் இப்போது எங்கள் ஜீவகிரந்தி தொலைந்தது. தர்மஸேது உடைந்துவிட்டது. பூமி விதவையானாள். பண்டிதர்கள் ஆசிரயத்தையிழந்தனர். ஸாஸ்வதிக்கு ஆதாரமில்லை. உலகங்களுக்கு உத்ஸவங்கிடையாது. மூர்க்கர்கள் தட்டுத்தடங்கலின்றி வெளிக்கிளம்பிவிட்டனர். நல்ல சரித்திரம் அஸ்தமித்துவிட்டது. உலகம் பாழுங்காடாயிற்று.

என்று புலம்பும் பட்டமஹரிஷியின் வர்க்கத்தைச் சமாதானப் படுத்தி, சோபைகுன்றின அரசனின் சரீரத்தைச்சூழ்ந்து துக்கித் தனர். முக்கிய மந்திரியான சகடாலன் வருத்தத்தை யடக்கமுடி யாதவனுய் மஹாராஜரே, ஏன் எங்களை வியாகுலப்படுத்திவிட்டு தவத்தால்பெற்ற பாலனுன சந்திரகுப்தனையும் சத்துருக்களுக் கிரையாக்கி அன்புடையோரும் உம்மையே கதியாயடைந்தவர் களுமான ரமணிகளையும் பொருட்படுத்தாமல் இவ்வுலகத்தைத் துறந்தீர் ? என்று புலம்பிக்கொண்டே ஸூக்ஷ்மமான திருஷ்டி யால் அரசனை வர்ணித்துக்கொண்டு, அவன் முகத்தில் சிறிது புஞ்சிரிப்புத் தோன்றுவதாக ஊஹித்துக்கொண்டு இது என்ன என்று பரபரப்புள்ளவனுய் அவனுடைய தலையைத்தொட்டான். அப்போது தூங்கி எழுந்தவன்போல நந்தன் இருகண்களையும் நன்றுய்த்திறந்துபார்த்து எதற்காக இந்தக்கோலாஹலம். நான் இறக்கவில்லை. நூறுவருஷங்கள் ஜீவிப்பேன் என்று மெள்ள மெள்ளச் சொன்னுன்.

குடிகளின் புண்ணியத்தால் நந்தன்ஜீவிக்கிறுன். எந்த ஸித்த புருஷனுலோ மஹாராஜன் ஜீவிக்கும்படி செய்யப்பட்டான்என்று வேலையாட்கள் எங்கும் சந்தோஷத்தால் ஆரவாரித்தபோது மந் திரிமார்களும் சந்தோஷத்தால் கண்மலர்ச்சியடைய அந்தப்புர ஸ்திரிகள் ஆநந்தத்தால் மனேவிகாஸத்தைப்பெறவே, அருகி லுள்ள வேலைபாட்கள் விச்வாஸத்தால் கண்மலர்ச்சியடைய, ஸ் துதிபாடகர்கள் ஜயசப்தத்தை அங்கணங்களில் பரவச்செய்யவே, வைத்தியர்கள் தந்வந்த்ரியால் கூறப்பட்ட தாதுவிஞ்ஞான சாஸ் திரப்பயிற்சியின் சிரமத்தைப் பயனற்றதாக எண்ணும்போது, திசைமுகங்கள் மங்களவாத்தியங்களின் ஒலியால்நிரப்பப்படவே பரபரப்போடு ஓடிவந்து பிரம்பை கையில்பிடித்த பிரதீஹாரியால் மஹாராஜாவே, பாடலீபுரத்திலிருந்து வந்தவரும், ஸகல சாஸ்தி ரங்களின் கரைகண்டவருமான வாருசியென்ற ஒரு மேன்குலத்த வர் வெளியில்நிற்கின்றுர். தேவரைப்பார்க்க விரும்புகிறுர். என்று விஜ்ஞாபிக்கப்பட்ட நந்தர், படுக்கையிலிருந்து எழுந்து, மங்கள முள்ளவனே, தாமதமின்றி இவரை உள்ளேவிடு என்று கட்டளை யிட்டான்.

பிறகு கஞ்சுகிகளால் பூஜ்யரே, இங்கே இங்கே என்று உள்ளே அழைக்கப்பட்ட வாருசியானவர், மஹாராஜரே, நான் ஒரு கார்யத்தை விரும்பிவந்தேன். தாங்கள் திரும்பிப்பிழைத்ததால் பெரிய உத்ஸவம் கொண்டாடப்படுகிறது. இந்த ஸந்தோஷ காலத்தில் குரு தக்ஷிணைக்காகக் கோடிப்பொன்னை எனக்குக்கொடுக்கச்செய்யும், என்று யாசித்தான். யோகநந்தன் அப்படியேயென்று கூறிவிட்டு முக்கிய மந்திரியான சகடாலனைப்பார்த்து இவருக்குக் கோடிபொன்கொடு என்று கட்டளையிட்டான்.

புத்திசாலியான இம்மந்திரித்தலைவன் தேவனே கொடுத்துவிடுகிறேன். என்று கூறிவிட்டு இது விசித்திரமாயிருக்கிறது. இறந்த இவனே பிழைத்திருக்கிறான். யாசகனும் இந்தருணமே வந்து சேர்ந்தான். கோடிஸுவர்ணத்தையும் யாசிக்கிறான். விசாரிக்காமலே கொடுக்கப்படட்டும் என்று ஆக்ஞையிடப்பட்டிருக்கிறது. என்று ஸந்தேஹங்கொண்டு, இது இவ்விதமிருக்க வேண்டும். இவன் யோகநந்தனே ஸத்தியமான நந்தன் அல்லன். என்று உள்ளபடியே ஊஹித்துவிட்டான். மனதிலும் தீரயோசனைசெய்தான் எப்படியாவது இருக்கட்டும் நந்தனுடைய பிள்ளை சிறுவன். ராஜ்யமோ அனேகபகைவருள்ளது. சாரர்களைக்கொண்டுஅறிந்து ஸகல பிணங்களையும் கொளுத்திவிடுவோம் பிறகு வெகுகாலம் இந்த யோகநந்தன் ஜீவித்திருப்பான்.

பிறகு சகடாலனுடைய கட்டளையால் தேவாலயத்தில் நன்றாய்ப்பாதுகாக்கப்பட்டுவந்த இந்திரதத்தனுடைய சரீரமும் ஆப்தர்களான சாரர்களாலறிந்து அப்ரம்மண்யம் என்றுகதறும் வியாடியையும் திரஸ்கரித்து பலாத்காரமாய் எரிக்கப்பட்டது.

யோகநந்தனும் கோடிப்பொன்னைக் கொடுத்துவிடு என்று அடிக்கடி தூண்டப்பட்ட மந்திரி அரசனே, வேலைக்கார' யாவரும் சந்தோஷத்தால் பரவசமான மனதுடன் இருக்கின்றனர். இந்தப் பிராம்மணன் முகூர்த்தநேரம் எதிர்பார்த்திருக்கட்டும் இதோ கொடுத்துவிடுகிறேன் என்று சொல்லிக்கொண்டு சிறிது நேரம் தாமஸித்தான்.

பிறகு கணரோகத்திற்குள்ளேயே அப்பிரம்மண்யம் அப்பிரம்மண்யம் யோகத்திலிருந்த பிராம்மணனை உயிர் துறந்தவன் என்று சொல்லி நாதனற்ற சவம்போல் உமது க்ஷேமகாலத்தில் என்னையுதரிவிட்டுப் பலாத்காரமாய் பிராம்மணசரீரம் ராஜபுருஷர்களால் தஹிக்கப்பட்டது என்று யோகநந்தனை யடைந்து வியாடி புலம்பினான். அதைக் கேட்டுக்கொண்டே சகடாலன் வாருசிக்குக் கோடிபொன்னைக் கொடுத்துவிட்டான்.

பிறகு சோகத்தோடுகூடின யோகநந்தன் தனிமையில் வியாடியைச் சொன்னதாவது— கோழனே பங்தியைப் பரிசுத்தி செய்பவரும், ஸோமயாகம் செய்பவருமான ச்ரோத்திரியர்களின் குலத்தில் ஜநித்த நான் இதே ஜன்மாவில் சூத்திரனாய்விட்டேன். எனக்கு நீடித்த லக்ஷ்மியாலும் யாதுபயன்? என்று வியாடி அவனைச் சமதானப் படுத்திக்கொண்டு காலத்திற்குத் தக்கவாறு சொன்னதாவது— சகடாலனலறியப்பட்டாய் மகாமேதாவியான இந்த மந்திரி முந்தின நந்தனுடைய குமாரனை சந்திரகுப்தனிடத்தில் மிக்க அன்புள்ளவன். ஒரு ஸமயம் உன்னையும் கொன்றுவிடுவான். ஆகையால் தவறுதலில்லாமல் சோகத்தை விட்டுவிட்டு வாருசியை முக்கியமான மந்திரிப்பதவியில் வைத்துக்கொள். நானும் இப்போதே பாடலீபுஞ் சென்று குருதக்ஷிணையைக் கொடுப்பதால் வர்ஷோபாத்தியாயரின் மனோபீஷ்டத்தைப் பூர்த்திபண்ணுகிறேன் என்று

அதையனுஸரித்து மந்திரி பதவியில் ஸ்தாபிக்கப்பட்ட வருருசியால் சகடாலன் இருக்கும்போது ராஜ்யம் நீடித்திராது. ஆகையால் இவனைக் கொல்வதற்கு உபாயத்தை யோசனைசெய் என்று அறியப்படுத்தப்பட்ட யோகநந்தன் உயிரோடிருந்து யோகநிஷ்டனானபிராம்மணன் இவனால்தஹிக்கப்பட்டான் என்று தோஷத்தைப் பிரசுரப்படுத்தி சகடாலனை அவனது நூறுபிள்ளைகளோடு இருள் நிறைந்த பெரும் பாழுங்கிணற்றில் பிரவேசிக்கச் செய்தான். பிள்ளைகளோடுகூடின அவனுடைய ஜீவனத்திற்கு ஒரு பாத்திரம் நிறைய ஸக்துமாவும், ஜலமும், பிலத்திற்குள் நாள்தோறும் வைக்கப்பட்டன.

இவ்விதம் எதிர்பாராமலே, நேர்ந்த விபத்தைச் சிந்திக்கின்ற மந்திரியால் பிள்ளைகாள் நீர் நிறைந்த இந்த ஸக்துரூபமான அன்னம் ஒருவனுக்குமே போதுமானதாயில்லை. ஆகையால், யோகநந்தனைப்பழிக்குப் பழிவாங்குவதற்கு நமக்குள் எவன் சக்திபெறவனோ அவனே இந்த ஆஹாரத்தால் ஜீவித்து வாட்டும் என்று கூறப்பட்ட அவர்கள் தகப்பனை நீரே வல்லர். நாங்கள் பிழைத்தும் பயனில்லை என்று சொல்லிக்கொண்டு அவன் பார்த்துக்கொண்டிருக்கும்போதே உயிர்மாண்டனர். உயிரைக்காட்டிலும் சத்துருக்களைப் பழிக்குப் பழிவாங்குவது தீரர்களுக்குப் பிரியமானதல்லவா?

ஸக்துமாவாலும் நீராலும் பிழைத்துவரும் சகடாலன், தனக்கு ஐசுவர்யத்தை விரும்புகிறவனால் பிரபுக்களிடம் உறுதியான சித்தத்தை அறியாமலும், நம்பிக்கையை யடையாமலும் தன்னிஷ்டப்படி வியவஹரிக்கக்கூடாது என்று தனது கன்மாவையே அனுஸரித்துச் சோகமடைந்தவனாயே கஷ்டப்பட்டு ஜீவித்து வந்தான்.

யோகநந்தனும் சகடாலனுடைய விருத்தாந்தத்தை மறந்தவனாய் ராஜ்ஜியத்தில் வேரூன்றி பூபதிகளுக்கு உரிய வஸ்திரம் ஆபரணம் ஆஹாரம், முதலான ஸௌக்கியங்களால் ஸத்துவகுணங்கள் அழிந்து ரஜோகுணம் மேலிட்டவனாய், இந்திரியங்கள் ஜயித்திருந்தபோதிலும் அனேக ஆபிர இந்திரியங்களால் இழுக்கப்பட்டவனாய், அரசருக்குரிய ஸகல சுகங்களையும் அனுபவித்து வந்தான். வியாடியோவெனில் குருதக்ஷிணை யளித்துவிட்டு தவத்திற்குக் கானகஞ்செல்ல விரும்பியவனாய் யோகநந்தனிடம் வந்து தன் எண்ணத்தை அறிவித்தான். முன் சமாசாரங்களை நினைத்துக்கொண்ட அரசன் தோழனே அதிர்ஷ்டத்தால் கிடைத்த இந்த ராஜ்யத்தில் என்னுடனேயே இருந்துநீயும் போகங்களை யனுபவிக்கலாமென்றான். சிற்றின்பங்களாகிற விஷந் தீண்டினதால் மயங்கியிருக்கும் நந்தனின் சரீரம்பெற்ற இந்திரதத்தனைக்கண்டு, இருமடங்குவைராக்கியமதிகமாயடைந்துவியாடி 'இவ்விதமான ஸாரமற்றவைகளில் எந்த புத்திசாலி மூழ்குவான் கானல் நீருக்கொப்பான லக்ஷ்மியானவள் அறிந்தவனை மயங்கச்

செய்யமாட்டாள். என்று அறிவித்தும் கஜப்பார்வையால் அரசனால் திரஸ்கரிக்கப்பட்டவனுப் தபோவனஞ் சேர்ந்தான்.

மந்திரியின் சுமையை வஹித்தவரான வருருசி சதுரங்கபலத்தோடுகூடினவராய் அரசனோடுகூட பாடலீபுரத்திற்குத் திரும்பினார். தவத்தால் சந்தோஷித்த கங்காதேவியின் அநுக்கிரகத்தால் ஏராளமான ஐசுவர்யத்தைப்பெற்று ஆராதிக்காமலே பிரஸன்னையான அசரீரியான ஸரஸ்வதியால் ராஜ்யகார்யங்கள் உபதேசிக்கப்பட்டவராய்க் கொண்டு, தாயாராலும், குருக்களாலும் வெகுமானிக்கப் பட்டவராய் பதியையே தேவதையாகக் கொண்ட உபகோசையால் பணிவிடைசெய்யப்பட்டு பற்றில்லாமலே இன்பங்களை யநுபவித்துக்கொண்டு வெகு வருடங்கள் காலங் கழித்தார்.

(தொடரும்)

கே. வி. சுப்பிரமணிய சாஸ்திரி.

---

# மதிப்புரை.

---

## பலதீபிகை.

ஜ்யோதிஷ பாகத்தில் பலங்களைக்கூறும் கிரந்தங்களுள் இந்தப் பலதீபிகை பலவிதத்திலும் பெருமைவாய்ந்தது. இக்கிரந்தம் நம் தென்னாட்டில் மிகவும் கியாதிபெற்றது. இதன் பெருமையை வடநாட்டாரும் அறியக்கருதி நாகராக்ஷரத்தில் இதனைப் பதிப்பித்த கோயம்புத்தூர் காலேஜ்ஸம்ஸ்கிருத பண்டிதர் ஸ்ரீமான் வ குப்புஸ்வாமிசாஸ்திரிகள் அவர்களை நாம் மிகவும் பாராட்டுகிறோம். முன்னம் கிரந்தலிபியில் அச்சிட்ட புஸ்தகங்களிலுள்ள பெரும் பிழைகளைத் திருத்தியும் ஆங்காங்கு பாடபேதங்களைக் காட்டியும், முக்கியமான டிப்பிணிகளைச் சேர்த்தும், இதுவரை வெளிவாராதிருந்த 27-ம் அத்தியாயத்தைத் தேடிப்பிடித்து வெளியிட்டும் 12 பாவங்களைக் கணிக்கவும் கர்ப்போதபத்தி லக்கின சோதனஞ் செய்யவும் நவீன கணிதவழியைக்

கூட்டியும் அச்சிடப்பட்ட இப்புஸ்தகம் யாவர்க்கும் உபயோகப் படும் என்று நம்புகிறோம். கும்பாகோணம் ஸ்ரீ கோமளாம்பா பிரஸ்ஸில் அச்சிடப்பட்டிருப்பதால் புஸ்தகத்தின் வெளிச்சிறப் பைப்பற்றி விரித்துக்கூற அவசியமில்லை. புஸ்தகம் ஷை பிரஸ் மானேஜரிடமிருந்து வாங்கிக்கொள்ளலாம்.

இதன் விலை ரூ. 2—0—0

---

## நியாயபிந்து.

ஸ்ரீ காசி ஸமஸ்கிருத ஸீரீஸ் புஸ்தகாலயத்திலிருந்து அத்தி யக்ஷரவர்களால் அனுப்பட்ட தர்மகீர்த்தி யெனப் பெயர்பெற்ற ஸ்ரீ பௌத்தசார்யரவர்களாலியற்றப்பட்ட நியாயபிந்து என்கிற புத்தகம் வரப்பெற்றோம். இது மூன்று பரிச்சேதங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இவைகளில் முறையே பௌத்தமத ஸித்தாந்தத்திற்கு வேண்டிய பிரமாணங்கள் நிரூபிக்கப்பட்டிருக் கின்றன. பிரத்யக்ஷம் அனுமானம். அர்த்தாபத்தி அனுபலப்தி என்கிற, இந்நான்கு பிரமாணங்களையும் அவைகளிலும் முந்திய பிரத்யக்ஷம் அனுமானம் என்கிற இவ்விரண்டுகளையும் நன்கு விசாரித்து தமது மதத்திற்குற்றவாறு சித்தாந்தம் செய்து பிறகு மற்ற இரண்டுப் பிரமாணங்களையும் சங்கிரகமாய் விசாரித்து ஸித் தாந்தம் செய்யப்பட்டிருக்கின்றது. பௌத்தமத ஸித்தாந்தத் திற்குரிய பிரமாணங்களை நன்கு அறியவிரும்புவோர்களுக்குஇப் புஸ்தகம் மிக்க உபகாரமாயிருக்கும்.

உபபத்திராதிபர்.

---

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதேல் லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே.

---